**மாகாண வீதிகள் செயற்திட்டம் - (கிழக்கு மாகாணம்) - 2014**

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் - (கிழக்கு மாகாணம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதே அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 சனவரி 11 ஆம் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க நிதி உடன்படிக்கையின் 4.09(ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, கிழக்கு மாகாண சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளதுடன் முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மற்றும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி உட்கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவத்தின் ஊடாக பெறுனரின் கிழக்கு மாகாணத்திலுள்ள சமூக பொருளாதார நிலையங்களிற்கான நுழைவு வழிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 20 மில்லியனுக்கு சமமான ரூபா 2000 மில்லியன் உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிசார் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4 கணக்காய்வாளரினுடைய பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவீனங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள்மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மல்வத்தை-சுறிப்போட்டை வீதியிலுள்ள இரண்டு பாலங்களினுடைய நிர்மாணங்களிற்கு மேற்கொள்ளும் கொடுப்பனவுகளுக்கு பிரயோகிக்கும் வீதங்கள் தொடர்பில் ஒப்பந்தக்காரருக்கும் செயற்திட்டத்திற்கும் இடையே ஏற்பட்ட பிணக்கின் மீது நடுவரால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க செயற்திட்டத்தால் ரூபா 40,042,967 தொகையை செலுத்துவதற்கு

வேண்டப்பட்டிருந்நது. எவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களில் மேல்குறிப்பிடப்பட்ட நிகழத்தக்கபொறுப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக் கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் |
| ஐடிஏ | 20 | 2,000 | 450.00 | 3.37 | 438.20 | 17.87 | 2,323.20 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 32.50 | 0.02 | 12.30 | 0.02 | 10.04 |
| **மொத்தம்** | **20** | **2,000** | **482.50** | **3.39** | **450.50** | **17.89** | **2333.24** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டமானது கிழக்கு மாகாணத்தில் 56.35 கிமீ மொத்த நீளமான 11 மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு 06 பொதிகளின் கீழ் ஒப்பந்தங்களை வழங்கியிருந்ததுடன் அதில், 05 பொதிகளின் கீழ் 56.15 கிமீ நீளமான 10 மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் செயற்திட்டத்தால் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் கையளிக்கப்பட்டும் இருந்தது. 2014 நவம்பர் 19 ஆம் திகதிய கடிதத்தின்படி உலகவங்கியானது காலம்போதாமை காரணமாக பொதி ஈபி – 08 இன் கீழான மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகளை இடைநிறுத்துவதற்கு அறிவித்திருந்நது எவ்வாறாயினும் செயற்திட்டமானது ரூபா 143,442,060 மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2014 நவம்பர் 12 இல் ஈபி-08 பொதியின் கீழ் 03 வீதிகளை புனரமைப்பதற்கு ஒப்பந்தங்களை வழங்கியிருந்நது.

### 3.3 <u>ஒப்பந்த நிர்வாகம்</u>

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 பொதிகளின் கீழ் 10 மாகாண வீதிகளில் புனரமைக்கப்பட்ட வீதியை குறியிடுதல், குறியீட்டுப்பலகைகள், வாய்க்கால்களில் மூடுபலகைகளைகளை பொருத்துதல், மற்றும் விளக்கு கம்பங்களிற்கு வர்ணம் தீட்டல் போன்ற வீதிப்பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்புதேவைப்பாடுகள் போன்றன

ஒப்பந்தக்காரரால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 15,000,000 மதிப்பிடப்பட்ட கிரயத்திலான நிந்தாவூர் வீதியின் 600 மீற்றர்கள் முழுமையான புனரமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், சகல வீதிகளினுடைய புனரமைப்பு வேலைகள் திருப்திகரமாக முடிவடைந்திருந்தது என பொறியியலாளர் சான்றுறுதி செய்திருந்தார்.

(ஆ) வெளிநாட்டு நிறுவனத்தோடு செய்யப்பட்ட ஆலோசனை ஒப்பந்தத்தினுடைய பொது நிபந்தனையின் 3.8 ஆம் பந்தியின்படி அறிக்கையானது ஆலோசனை ஒப்பந்தத்தின் இறுதியில் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் 2014 நவம்பர் 30 இல் ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் ஒப்பந்தக்காரரால் 2015 மே 31 இலும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.